Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

TUESDAY, JULY 23 2024

செவ்வாய்க்கிழமை ஜுலை 23, 2024 | ஒளி: 10 கதிர் 300 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE




# தபால் தயார்

ஜனாதிபதித் தேர்தலுக்குத் தபால் திணைக்களம் தயாராக இருப்பதாகப் பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க கொழும்பில் திங்கட்கிழமை (22) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் திகதி அறிவித்தவுடன் தபால் திணைக்களத்தின் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றார்.

# ஜீவனை கைது செய்ய உத்தரவு



ரஞ்சித் ராஜபக்ஷ, ஆ.ரமேஸ்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் தோட்ட நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் உட்பட பல சந்தேக நபர்களை கைது செய்து அவர்களை முன்னிலைப்படுத்துமாறு நுவரெலியா பதில் நீதவான் ஜயமினி அம்பகஹவத்த, நுவரெலியா பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். களனிவெளி பெருந்தோட்ட முகாமைத்துவ கம்பனிக்கு உட்பட்ட நுவரெலியா பீட்றூ தோட்ட தேயிலை தொழிற்சாலைக்குள் அத்துமீறி நுழைந்து தொழில் நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்ததாக, நிர்வாகத்தினால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு, வழக்குத்தாகல் செய்யப்பட்டிருந்தது. அந்த வழக்கு, திங்கட்கிழமை (22) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, அமைச்சருமான ஜீவன் தொண்டமான் உட்பட மேலும் பலரைக் கைது செய்து ஓகஸ்ட் 26ஆம் திகதியன்று, நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# ஹிருணிகாவுக்கு நிபந்தனை பிணை



இளைஞன் ஒருவரைக் கடத்திச் சென்று தாக்கிய சம்பவத்தில் தனது தனிப்பட்ட மெய்ப்பாதுகாவலர்களுக்கு உதவிய குற்றச்சாட்டில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா, திங்கட்கிழமை (22) பிணை வழங்கியுள்ளார்.

தொடர்ச்சி P2



# ஈரப்பலாகாயால் தாக்கியதில் பெண் பலி

தனிப்பட்ட தகராறு காரணமாக 79 வயதுடைய பெண் ஒருவரின் தலையில் ஈரப்பலாகாயால் தாக்கி கொலை செய்த 25 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக மல்சிறிபுர பொலிஸார் தெரிவித்தனர்.

மல்சிரபுரவை சுற்றியுள்ள கிராமத்தில் வசித்து நான்கு பிள்ளைகளின் தாயான எச்.சி.அசிலின் என்பவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்:

# விலகிய பைடன் கமலாவுக்கு ஆதரவு



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 5ஆம் திகதி நடைபெற உள்ளது. இதில் ஜனநாயக கட்சி சார்பில் வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் அறிவிக்கப்பட்டார். அவர் பரப்புரை மேற்கொண்ட நிலையில் தேர்தலிலிருந்து விலகுவதாக ஞாயிற்றுக்கிழமை (21) அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். அதோடு துணை அதிபர் கமலா ஹாரிஸை ஜனநாயக கட்சியின் வேட்பாளர் ஆக ஆதரவு தெரிவித்துள்ளார்.

81 வயதான ஜனாதிபதி பைடன், தனது தேர்தல் பிரச்சாரத்தில் தடுமாற்றத்துடன் பேசி வந்தார்.

தொடர்ச்சி P2



# இரகசியத்தை கக்கினார் 'டெட்டூ' துலான்

அத்துருகிரிய பச்சை (டெட்டூ) குத்தும் மையத்தில் வைத்துக் கொல்லப்பட்ட 'கிளப் வசந்த' என்ற சுரேந்திர வசந்த பெரேராவின் படுகொலை தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பச்சை குத்தும் நிலையத்தின் உரிமையாளர் துலான் சஞ்சய், நீதிமன்றத்தில் இரகசிய வாக்குமூலத்தை திங்கட்கிழமை (22) வழங்கினார்.

தொடர்ச்சி P2

## தேர்தலின் போது இலஞ்சம் வழங்கும்

# இலஞ்ச குற்ற அபராத தொகை அதிகரிப்பு

தேர்தலின் போது இலஞ்சம் வழங்கும் குற்றத்திற்காக விதிக்கப்படும் அபராதத்தை 500 ரூபாவில் இருந்து ஒரு மில்லியன் ரூபாவாக அதிகரிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

குற்றவியல் சட்டக்கோவையில் திருத்தம் மேற்கொள்வதற்கான சட்டமூலத்தின் ஊடாக இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த சட்டமூலம் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் கையொப்பத்துடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, தேர்தலின் போது இலஞ்சம் வழங்கும் குற்றத்திற்காக விதிக்கப்படும் அபராதம் 200 ரூபாவில் இருந்து 750,000 ரூபாவாக அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## சர்வஜன வாக்கெடுப்புக்குச் சென்றால்

# "ரூ.1,000 கோடி செலவாகும்"

### ஜப்பானில் அநுரகுமார தெரிவிப்பு: தாங்கள் தயார் என்கிறார்

ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்கள் என்பது உயர்நீதிமன்றத்தினால் ஏற்கெனவே உறுதிசெய்யப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் மூன்று சந்தர்ப்பங்களில் வழங்கிய தீர்ப்புகள் மூலமாகப் பதவிக்காலம் ஐந்து வருடங்களே என்பது தீர்மானிக்கப்பட்டுவிட்டது. இவ்வாறான நிலையில், சர்வஜன வாக்கெடுப்புக்குச் சென்றால் 1,000 கோடி ரூபாய் செலவாகும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# 3 நிகழ்ச்சிகளுக்கு எதிராக முறைப்பாடு


அரச நிதிகளைப் பயன்படுத்தி வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் மாவட்ட மட்டத்தில் முன்னெடுக்கப்படும் ஹருசரு, Smart Youth மற்றும் Global Fair போன்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்கு எதிராகத் தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் நோக்கம் எதுவாக இருந்தாலும் செயல்முறையும், பயனாளிகள் தெரிவு அரசியல் ரீதியாக நடந்து வருகின்றமை உள்ளிட்ட தேர்தல் பிரசார நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதான தோற்றப்பாடு எழுவது தொடர்பாகக் கவனம் செலுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## அமைச்சரவையின்

# "ஒற்றுமைக்கு விழுந்த மரண அடி"



அரசியலமைப்பின் 22ஆவது திருத்தத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, வர்த்தமானியில் வெளியிடுவதற்கு உத்தரவிட்டதன் ஊடாக, அமைச்சரவையின் ஒற்றுமைக்கு மரண அடி விழுந்துள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் திங்கட்கிழமை (22) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தத்தை அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் கலாநிதி பந்தன குணவர்தன முதன்முறையாக

தொடர்ச்சி P2

# புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து



எஸ்.தில்லைநாதன்

தமிழ்த் தேசிய கட்சிகளுக்கும். தமிழ் மக்கள் பொதுச்சபைக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம், திங்கட்கிழமை (22) கைச்சாத்திடப்பட்டது.

தமிழ் மக்கள் பொதுச்சபையின் செயற்பாட்டாளர் பேராசிரியர் K.T. கணேசலிங்கம் தலைமையில் தந்தை செல்வா அரங்கில் காலை 11:30 மணியளவில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினரும். தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளருமான சி.வி.விக்னேஸ்வரன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை இயக்கம் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜனநாயக போராளிகள் கட்சிகள் சார்பில் அதன் தலைவர் வேந்தன்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஈரப்பலாகாயால் தாக்கியதில் பெண் பலி

இக்கொலை தொடர்பான நீதவான் விசாரணையும் பிரேதப் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டு, மரணத்துடன் தொடர்புடைய சந்தேகநபரான இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஈரப்பலாகாயைக் கைப்பற்றி மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இரு குடும்பங்களுக்கு இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறில் சந்தேகநபர் பெண்ணின் கையிலிருந்த ஈரப்பலாகாயை பிடுங்கி, அப்பெண்ணின் தலையில் தாக்கியுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும், வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது பெண் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## விலகிய பைடன் கமலாவுக்கு ஆதரவு

குடியரசு கட்சி வேட்பாளர் ட்ரம்ப் உடனான முதல் நேரடி விவாதத்தின் போதும் தடுமாறினார். இது அவரது சொந்த கட்சியைச் சேர்ந்தவர்களையே அதிருப்தி அடையச் செய்தது. அதன் காரணமாக அவர் ஜனாதிபதித் தேர்தல் போட்டியிலிருந்து விலக வேண்டுமெனச் சொல்லப்பட்டது. கட்சியின் மூத்த தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களும் அதிருப்தியுடன் இருந்தனர். இந்நிலையில், தேர்தலிலிருந்து அவர் விலகி உள்ளார்.

“அமெரிக்க ஜனாதிபதி நான் பணியாற்றுவது எனது வாழ்நாளில் எனக்குக் கிடைத்த மிகப்பெரிய கவுரவம் ஆகும். மீண்டும் தேர்தலில் போட்டியிடுவது எனது நோக்கம். இருந்தாலும் நான் தேர்தலிலிருந்து விலகுகிறேன். எஞ்சி உள்ள எனது பதவிக்காலத்தை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துவேன். இது ஜனநாயக கட்சி மற்றும் நாட்டின் நலன் சார்ந்து நான் எடுத்துள்ள முடிவு. இது குறித்து விரைவில் விரிவாகப் பேசுவேன்” என்று பைடன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், கமலா ஹாரிஸ் தனது எக்ஸ் தளத்தில்.

“அமெரிக்க மக்களின் சார்பாக ஜனாதிபதி ஜோ பைடனுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அமெரிக்க நாட்டுக்காக பல ஆண்டுகள் சிறப்பான தலைமைப்பண்பு அவர் பணியாற்றி உள்ளார். கட்சியின் வேட்பாளராக ஜனாதிபதி எனக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். அது எனக்குக் கௌரவம் அளிக்கிறது. ஜனநாயக கட்சியின் வேட்பாளர் போட்டியில் நான் வெற்றி பெற விரும்புகிறேன். அதுவே எனது எண்ணமும் கூட. கட்சியையும், தேசத்தையும் ஒருங்கிணைத்துத் தேர்தலில் ட்ரம்பை வீழ்த்துவேன்” என கமலா ஹாரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் ஜனநாயக கட்சியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முதல் கறுப்பின பெண்ணாக அறியப்படுவார்.

## இலஞ்ச குற்ற அபராத தொகை அதிகரிப்பு

வாக்கெடுப்பின் போது அநாவசிய அழுத்தம் பிரயோகத்திற்கு விதிக்கப்பட்ட 500 ரூபாய் அபராதம் ஒரு இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. தேர்தலொன்றில் ஆள்மாறாட்டம் செய்யும் குற்றத்திற்காக இதுவரை 300 ரூபாய் மாத்திரமே அபராதமாக அறவிடப்பட்டது. இதனை ஒரு இலட்சம் ரூபா வரை அதிகரிக்க சட்டமூலத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் கணக்குகளைத் தவறவிடுவோருக்கு இதுவரை விதிக்கப்பட்ட 300 ரூபாய் அபராதம் ஒரு இலட்சம் ரூபாய் வரை அதிகரிக்கப்படவுள்ளது.

இதுதவிர பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பிலும் இதுவரை விதிக்கப்பட்டு வந்த அபராதத்தையும் அதிகரிப்பதற்கு இந்த சட்டமூலத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

## “ஒற்றுமைக்கு விழுந்த மரண அடி”

ஊடகங்களுக்கு ஜூலை 9ஆம் திகதி முன்வைத்தார்.

நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்‌ஷ, உத்தேச 22 ஆவது அரசியலமைப்புச் சட்டம் ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை வர்த்தமானியில் வெளியிடப்பட மாட்டாது என்று ஜூலை 18 அன்று அறிவித்தார். ஆனால் நீதி அமைச்சரின் கூற்றுக்கு மாறாக உத்தேச அரசியலமைப்புச் சட்டம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கையால், அமைச்சரவையின் ஒற்றுமைக்கு மரண அடி ஏற்பட்டது, உத்தேச 22வது அரசியலமைப்புச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கான முதல் நாளான 25ஆம் திகதியாகும்.

உத்தேச அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்குப் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை தேவை, அது கிடைத்தாலும் 30 நாட்களுக்குள் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றார்.

ஏழ்மை அதிகரித்துள்ள நிலையில் 22ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எம்.பிக்கள் பாரபட்சமாக செயற்பட்டால் அதுபற்றி ஒருமுறைக்கு இருமுறை சிந்திக்க வேண்டும். இவ்வாறான நிலையில் இந்த உத்தேச அரசியலமைப்பு திருத்தத்தைக் கொண்டு வருவது பொருத்தமானதல்ல என நீதி அமைச்சர் கூட கருதுகின்றார்.

அமைச்சர் தனது பரிந்துரைகளுக்கு முரணாகத் திருத்தத்தை வர்த்தமானியில் வெளியிட்டவர்களே தனது உத்தரவுகளுக்கு மாறாக எடுக்கப்பட்ட முடிவுகளால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்குப் பொறுப்பு என்று கூறியுள்ளார். இந்நிலையில், இந்த உத்தேச அரசியலமைப்பு திருத்த மசோதா ஜனாதிபதி தேர்தலைக் கடுமையாகப் பாதிக்கும் என்றும் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# ஜீவனை கைது செய்ய உத்தரவு

களனி வெளி பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் உடரதல்ல தோட்ட நிர்வாகம் உடரதல்ல தொழிலாளர்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பில் நுவரெலியா மாவட்ட தொழில் திணைக்களத்தில் இரு தரப்புகளும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் நுவரெலியாவுக்கு மே 30ஆம் திகதி மாலை வருகை தந்திருந்தார்.

மாவட்ட உதவி தொழில் ஆணையாளர் தலைமையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை அன்றையதினம் இணக்கப்பாடின்றி முடிவுற்றது.

இதைத் தொடர்ந்து அமைச்சர் ஜீவன் தொண்டமான் உடரதல்ல தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பில் களனிவெளி பெருந்தோட்ட கம்பனிக்கு எதிராகத் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க உள்ளதாகத் தெரிவித்து பீட்று தோட்ட தொழிற்சாலையில் இருந்த தோட்ட அதிகாரிகளைச் சந்திக்க உள்ளதாகத் தெரிவித்து தனது ஆதரவாளர்களுடன் அன்றைய தினம் (மே 30) மாலை சென்றிருந்தார்.

தோட்டத் தொழிற்சாலைக்குள் அத்துமீறி தொழில் நடவடிக்கைக்குப் பாதகம் விளைவித்த அமைச்சர் ஜீவன் உள்ளிட்டவர்களுக்கு எதிராக நுவரெலியாவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதேநேரம், பொலிஸ் விசாரணைக்கு ஜீவன் தொண்டமான், வருகை தந்திருந்த போது சமரசமாகப் பேசியதன் பின்னர் இந்த முறைப்பாட்டை வாபஸ் பெறுவதாக பீட்று தோட்ட நிர்வாகம் தெரிவித்திருந்தது.

எனினும், முறைப்பாடு வாபஸ் பெறப்படாமையால், நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸார் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

அந்த வழக்கே திங்கட்கிழமை(22) காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கு விசாரணையில் ஆஜராகாத பிரதிவாதிகளைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிறுத்துமாறு பதில் நீதவான் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், களனி வெளி பெருந்தோட்ட நிறுவனத்தின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி அனுர மெத்தேகொ, வழக்கறிஞர்களான பாலித சுபசிங்க, சுரேஷ் கயான் ஆகியோர் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

## “ரூ.1,000 கோடி செலவாகும்”

ஜப்பானின் Tsukubaவில், இலங்கை மக்களுடனான சந்திப்பு, ஞாயிற்றுக்கிழமை (21) நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எனது வெளிநாட்டு விஜயங்களுக்காக 700 இலட்சம் செலவாகியதாக ஒருவர் கூறியிருந்தார். இலங்கைக்குத் திரும்பிச் சென்றதன் பின்னர், சிலநாட்களுக்குள் வெளிநாட்டு விஜயங்களுக்கான அனைத்துச் செலவுகள் பற்றிய விபரங்களையும் மக்களிடம் சமர்ப்பிக்க எதிர்பார்க்கிறேன். நாங்கள் செலவிட்டிருப்பது அரசாங்கப் பணத்தையல்ல என்பதையும் உறுதியாகக் கூறுகிறோம். வெளிநாடு சென்றுள்ள இலங்கையர்மீது சிலர் பாரிய குற்றச்சாட்டினை முன்வைத்து இத்தடவை வாக்களிக்க செல்லவேண்டாமென்ற கதைகளைக் கூறியுள்ளார்கள்.

பலர் நாட்டைவிட்டுச் சென்றமைக்கான காரணம் எமது நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமையாகும். அதைப்போலவே எமது நாட்டின் அரசியல் மாற்றமொன்றை ஏற்படுத்துவது தொடர்பில் வெளிநாடு சென்றுள்ள இலங்கையர்களுக்கு விசேட உரிமை இருக்கின்றது. ஏனெனில் இன்றும் எமது நாடு ஓடிக்கொண்டிருப்பது வெளிநாடுகளில் தொழில்புரிபவர்கள் அனுப்பிவைக்கின்ற பணத்திலாகும்.

இந்த மாதம் கழிவதற்கு முன்னராக தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வேட்பு மனுக்கள் கோரப்படுகின்ற தினம் மற்றும் தேர்தல் நடைபெறுகின்ற தினம் பற்றி அறிவிக்கப்படுமென நாங்கள் நினைக்கிறோம். அவ்வாறு இருக்கையில் ரணில் விக்ரமசிங்க தேர்தலுக்காகப் போட்டியிடுவது தொடர்பில் தான் கொண்டுள்ள ஐயப்பாட்டினை சமூகத்திற்கு விடுவித்துள்ளார். அவர் தேர்தலில் போட்டியிடுவாராயின் எந்த கட்சியிலிருந்து? தேர்தல் சின்னம் என்ன? ரணிலுக்கு மகிந்த ஒத்துழைப்பு வழங்குவாரா? போன்ற சிக்கல்கள் காரணமாக அவர் ஐயப்பாட்டுடனேயே இருக்கிறார்.

நீதிமன்றத்தினூடாக பிற்போட எடுத்த முயற்சிகள் இரண்டுமே உயர் நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது. அதனால் அரசியல் அமைப்புக்கான 22ஆவது திருத்தத்தை வர்த்தமானியில் பிரசுரித்து ஒரு குழப்ப நிலையை ஏற்படுத்த முயற்சி செய்கிறார். இந்த அரசியலமைப்பு திருத்தச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அங்கு இரண்டு வாரங்கள் கழிய இடமளித்து, அடுத்த மூன்று வாரங்கள் நீதிமன்ற அலுவல்களுக்காக ஒதுக்கப்பட்டு, அந்த மூன்று வாரங்களுக்குப் பின்னர் நீதிமன்றத் தீர்ப்பு பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டு, பாராளுமன்றத்தில் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை நடாத்தி பாராளுமன்றத்தில் 2/3 வாக்குப்பலத்துடன் அங்கீகாரம் பெறப்படவேண்டும். அதன் பின்னர் மக்கள் தீர்ப்பொன்றுக்கு அழைப்பு விடுப்பதற்கு ஏதுவாக தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கவேண்டும். இந்த செயற்பாங்கு இடம்பெற்றுக்கொண்டிருக்கையில் ரணில் விக்ரமசிங்க வீட்டுக்குச் செல்லவேண்டி நேரிட்டிருக்கும்.

தேசிய மக்கள் சக்தியை சேர்ந்த நாங்கள் எந்தவொரு தேர்தலுக்கும் தயார். ஜனாதிபதி தேர்தல் உரிய வகையில் நடத்தப்படும். ரணில் வீட்டுக்குச் செல்லவேண்டி நேரிடும். அவர் அமைதியாக வீட்டுக்குச் செல்வார். தலைவர்களை வீட்டுக்கு அனுப்புகின்ற முதலாவது தருணம் இதுவல்ல.

எமது நாட்டில் நீண்டகாலமாக மக்கள் தலைவர்களை வீட்டுக்கு அனுப்பி புதிய தலைவர்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள். எனினும் இதுவரை மிகவும் சிறப்பாகச் சட்டம் அமுலாக்கப்படுகின்ற, ஒழுக்கம் நிலவுகின்ற, எந்தவொரு தொழிலையும் புரிபவருக்குத் தரமான உணவு வேளையொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை கிடைப்பதைப்போலவே அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் நிறைவடைந்த ஒரு நாடு உருவாக்கப்படவில்லை. இன்று நிலவுவது நாங்கள் எதிர்பார்த்த அடிப்படை விடயங்களில் மிகவும் வறுமைப்பட்ட ஒரு நாடாகும். பொருளாதாரத்தில் மாத்திரமல்ல உளப்பாங்குகளில், சட்டத்தை அமுலாக்குவதில், சுற்றாடலைச் சுத்தமாக வைத்துக்கொள்வதில் வறுமைப்படுள்ளதோடு, குற்றச்செயல்கள் நிறைந்த, போதைப்பொருட்கள் நிறைந்த, மோசடி, ஊழல்கள், விரயங்கள் நிறைந்த ஒரு நாடு உருவாக்கப்பட்டுள்ளது. உலகத்திற்குக் கடன் செலுத்திக்கொள்ள முடியாத அளவுக்கு நாடும் பிரஜைகளும் வறுமைப்பட்ட மிகவும் பாதகமான கடினமான வாழ்க்கை உரித்தாகிய மக்கள் இருக்கின்ற ஒரு நாடாக இலங்கை ஏன் மாறியது?

அழிவுமிக்க பயணப்பாதையை மாற்றியமைப்பதற்கான மிகச் சிறந்த வாய்ப்பு உருவாகியிருக்கிறது. இதற்கு முன்னர் தேசிய மக்கள் சக்தியை சேர்ந்த நாங்கள் அதிகாரத்தைக் கோரினாலும் சமூகம் அதிகாரத்தைக் கொடுக்க தயார் நிலையில் இருக்கவில்லை. அதனால் நாங்கள் பாராளுமன்றத்தின் ரிமோட் கொன்ரோலை எங்களிடம் கொடுக்குமாறும் மற்றுமொரு சந்தர்ப்பத்தில் திறவுகோலை எங்களிடம் ஒப்படைக்குமாறும் வேண்டுகோள் விடுத்து இவ்வளவு தூரம் பயணித்திருக்கிறோம்.

கடந்த சில தசாப்தங்களில் மக்களின் சிந்தனைகள் பெருந்தொகையான கள்வர்களைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பிவைத்து அந்த கள்வர்களைப் பிடிப்பதற்காக ஜே.வி.பியின் மூன்று நான்கு பேரை அனுப்பிவைப்பதிலேயே இருந்தது. அரசாங்கம் தவறான வேலைகளைச் செய்யும்போது அவற்றை அம்பலத்திற்குக் கொண்டுவர அவர்கள் இருந்தால் நல்லது எனும் எண்ணக்கருவே நிலவியது. எனினும் தற்போது மக்களின் மனங்களில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமொன்றை அமைக்கவேண்டும் என்பது நிலைகொண்டுள்ளது. எங்களுடைய தேவை இருக்கின்றதென்பதற்காக அதிகாரத்தை எடுத்துவிட முடியாது.

நாங்கள் எந்த இடத்தில் ஆரம்பிக்க வேண்டும்? ஒருவருக்கொருவர் இடையில் சந்தேகம், அவநம்பிக்கை, வன்மம், குரோதத்தை வளர்த்தெடுத்ததால் முன்னேற்றமடைந்த ஒரு தேசம் உலகில் இல்லை. அவை மூலமாக வறிய நாடுகள் மாத்திரமே உருவாக்கப்படும். எமது நாட்டில் தேசிய ஒற்றுமையை உருவாக்குவது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதானமான பணிகளின் ஒன்றாகும் என்றார்.

## ஹிருணிகாவுக்கு நிபந்தனை பிணை

50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சரீர பிணை, 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்க நீதிபதி உத்தரவிட்டார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவிற்கு அமைய, குற்றம்சாட்டப்பட்ட ஹிருணிகா பிரேமச்சந்திர பிணையில் விடுவிக்கப்பட்டார்.

முன்வைக்கப்பட்ட காரணங்களை அவதானத்தில் எடுத்து, நிபந்தனை பிணை வழங்கிய நீதிபதி, கடவுச்சீட்டையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

## இரகசியத்தை கக்கினார் ‘டெட்டு’ துலான்

சந்தேகநபர் துலான் சஞ்சய் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நுவான் ஜயவர்தன, தனது கட்சிக்காரரிடம் இரகசிய வாக்குமூலமொன்றை வழங்க விரும்புவதாக நீதிமன்றில் அறிவித்தார்.

அங்கு நீதவான் சனிமா விஜேபண்டார, சந்தேக நபரிடம் இரகசிய வாக்குமூலமொன்றை வழங்கும் போது நீதிமன்றில் உள்ள நிபந்தனைகளைத் தெரிவித்ததுடன், அந்த நிபந்தனைகளின் அடிப்படையில் இரகசிய வாக்குமூலத்தை வழங்க இணங்கினால், பிற்பகல் இடைவேளையின் பின்னர் சந்தேகநபரின் இரகசிய வாக்குமூலத்தை வழங்க முடியும் எனவும் தெரிவித்தார்.

இதன்படி பகல் இடைவேளையின் பின்னர் குறித்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, நீதவானின் பிரத்தியேக அறைக்குச் சென்று வாக்குமூலமளித்தார்.

## 3 நிகழ்ச்சிகளுக்கு எதிராக முறைப்பாடு

பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் திணைக்களத்துக்குச் சொந்தமான வளங்களைத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்துதல் தொடர்பாக அவதானம் செலுத்துமாறும் கோரப்பட்டுள்ளது.

பல்வேறு அரச வேலைத்திட்டங்களின் ஊடாக பிரதேச மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பிரதேச அரசியல்வாதிகள் நடந்து கொள்ளும் விதம் தேர்தல் சட்டங்களுக்கு முரணானவையாகும். இது ஒரு வகையில் மறைமுக தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருவது தொடர்பில் அவதானம் செலுத்துமாறும் கோரப்பட்டுள்ளது.

## புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

பசுமை தேசிய இயக்கம் சார்பில் அதன் தலைவர் ஐங்கரநேசன், தமிழ்த் தேசிய கட்சி சார்பில் அதன் பொதுச்செயலாளர் ஸ்ரீகாந்தா. புளொட் சார்பில் அதன் தலைவர் சித்தார்த்தன், ரெலோ சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கையொப்பமிடப்பட்டனர்.

தமிழ் மக்கள் பொதுச் சபை சார்பில் பேராசிரியர் கே ரீ கணேசலிங்கம், அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான சி.ஆ.யோதிலிங்கம். அரசியல் விமர்சகர் நிலாந்தன், வசந்தராசா, ஆய்வாளர் யசீந்திரா உட்பட பலரும் கையொப்பமிட்டுள்ளனர்.

# “வறுமையை ஒழிப்பதற்கு மீண்டும் ஜனசவிய திட்டம்”

நாட்டின் வறுமையை ஒழிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் மீண்டும் ‘ஜனசவிய’ திட்டத்தை கொண்டு வருவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுல்ட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 330ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பன பொலன்னறுவை, மெதிரிகிரிய, பள்ளியகொடல்ல அந்நூர் முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு ஜூலை 17ஆம் திகதி இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், நாட்டில் பாதி பேர் ஏழ்மை நிலையை அடைந்துள்ளனர். என்றாலும் நாட்டில் வறுமை ஒழிப்புக்கான ஒழுங்கமைந்த திட்டமொன்றை முன்னெடுத்த பாடில்லை. ஜனசவிய மூலம் மக்கள் பலப்படுத்தப்பட்டனர். இது நிரந்தர உதவித்திட்டமாக அல்லாமல், அடைவுகளை மையப்படுத்தி 2 ஆண்டுகளுக்கு மட்டுமே இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்தன. அக்காலத்தில், அக்காலத்தை மையமாகக் கொண்டு, ஒரு கால அட்டவணையின் பிரகாரம் வறுமையை ஒழிக்கவும், மக்களை வலுவூட்டவும் இத்திட்டம் முன்னெடுத்து வரப்பட்டது. இன்றளவும் வறுமையை ஒழிக்க இத்தகைய திட்டவட்டமான வேலைத்திட்டத்தின் தேவை காணப்படுகிறது. இந்த நேரத்திலும், இவ்வாறானதொரு வேலைத்திட்டம் நாட்டுக்குத் தேவைப்படுவதால், ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இக்காலத்துக்கு ஏற்ற வகையில் அமைந்த இவ்வாறான வேலைத்திட்டத்தை முன்னெடுப்போம்.

வங்குரோத்து நிலையால், போராட்டங்களுக்கு மத்தியில் மக்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்தி வருகின்றனர். அத்துடன், நாட்டின் பெரும்பான்மையான மக்கள் ஏழ்மை நிலையை அடைந்துள்ளனர். ஏழ்மையில் இருந்து வெளிவரப் பிள்ளைகளுக்கு வழங்கப்பட முடியுமான மிக உயர்ந்த பரிசு சர்வதேச தரத்திலான, சிறந்த தரமான கல்வியாகும் என்பதை நாமனைவரும் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும். நவீன உலகுக்கு ஏற்ற கல்வியறிவைப் பிள்ளைகள் பெறுவார்களானால் சர்வதேச தொழிற்சந்தையில் கூடிய வருமானம் ஈட்டக் கூடிய தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொள்வார்கள். மனப்பாட முறையிலான கல்வி கொள்கையால் இந்த இலக்கை எம்மால் அடைய முடியாது. கல்வியில் பாரிய சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

எமது ஆட்சியில் சர்வதேச மட்டத்தை எட்டும் வகையில் பாடத்திட்டத்தை நாம் உருவாக்கித் தருவோம். ஸ்மார்ட் ரீதியான கல்வியை முன்னெடுப்பது போலவே ஸ்மார்ட் விவசாயத் திட்டங்களை உருவாக்கித் தருவேன் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, பாடசாலை அபிவிருத்தி நிதியத்திற்கு ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.



## கைக்குண்டு மீட்பு

**ரீ.எல்.ஜவ்பர்கான், கனகராசா சரவணன்**

காத்தான்குடி-பூநொச்சிமுனையில் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான வீடு ஒன்றுக்கு அருகிலுள்ள வடிகான் பகுதியில் கை விடப்பட்ட நிலையில் கைக்குண்டு ஞாயிற்றுக்கிழமை (21) இரவு மீட்கப்பட்டதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கைக்குண்டு மீட்கப்பட்ட வீட்டுக்கு அருகிலுள்ள வீட்டின் மீது கடந்த 15ஆம் திகதி திங்கட்கிழமை இரவு இனந்தெரியாதோரால் குண்டு வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, திங்கட்கிழமை (22) காலை முதல் குறித்த கைக்குண்டு மீட்கப்பட்ட இடத்திற்கு அருகிலுள்ள வீடுகளில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## விடுதி ஒன்றிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

**செ.தி.வாகரன்**



நுவரெலியாவில் உள்ள தங்குமிட விடுதி ஒன்றிலிருந்து திங்கட்கிழமை (22) ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளார்.

பனாபிட்டிய-கரந்தெனிய பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபர் கடந்த வெள்ளிக்கிழமை (19) பிற்பகல் தங்குமிடத்திற்கு வந்ததாகவும் திங்கட்கிழமை(22) காலை அந்த இடத்தை விட்டு வெளியேறுவதாகவும் விடுதி நிர்வாகத்துக்குத் தெரிவித்துள்ளார்.

எனினும், திங்கட்கிழமை(22) காலை வரை வெளியே வராத காரணத்தால் சந்தேகம் ஏற்பட்ட ஊழியர் ஒருவர், அறையில் ஜன்னல் வழியாகப் பார்த்தபோது, குறித்த நபர் தரையில் விழுந்து கிடப்பதைக் கண்டு, நுவரெலியா பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

இதற்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், குறித்த நபர் தங்கியிருந்த அறையின் கதவை உடைத்து உள்நுழைந்து பார்த்த போது, அவர் கீழே விழுந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

பின்னர் பொலிஸாரால் 1990 நோயாளர் அம்பியூலன்ஸ் சேவைக்கு அழைப்பு விடுத்ததையடுத்து, ஸ்தலத்துக்கு விரைந்தவர்கள் பரிசோதனை செய்து குறித்த நபர் உயிரிழந்துள்ளதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

சடலத்தை மீட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## கோவில் நகைகளை திருடிய குருக்கள் கைது

**பு.கஜிந்தன்**

யாழ்ப்பாணம்- ஊர்காவற்றுறையில் உள்ள புளியங்கூடல் இந்தன் முத்துவிநாயகர் கோவில் நகைகளைத் திருடிய குற்றச்சாட்டில், 28 வயதான உதவிக் குருக்கள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆலயத்துக்குள் பாதுகாப்பாகப் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த 62 பவுண் நகைகள் மற்றும் 8 இலட்சம் ரூபாய் பணம் என்பன காணாமல் போயிருந்தமை தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆலயப் பெட்டகம் உடைக்கப்படாத நிலையில், நகைகள் காணாமல் போயிருந்ததால், போலி சாவிகளைகளைப் பயன்படுத்தி நகைகள், பணம் என்பன திருடி இருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது.

இந்தநிலையில், குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்று அந்தப் பிரதேச மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்திருந்தனர்.



இது தொடர்பில் யாழ். பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், சந்தேகநபரான குருக்கள் ஞாயிற்றுக்கிழமை (21) கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த சந்தேகநபரிடம் இருந்து 40 பவுண் நகைகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய நகைகள் வங்கியில் அடகு வைக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டு அவையும் மீட்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேநபர் கைது செய்யப்பட்டு, கோயில் நகைகள் கண்டுபிடிக்கப்பட்டதை, அப்பிரதேச மக்கள் வெடி வெடித்துக் கொண்டாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக கட்டிடம் திறந்து வைப்பு

**றியாஸ் ஆதம்**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகக் கட்டிடம் ஞாயிற்றுக்கிழமை (21) அன்று உத்தியோகப்பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் சராப்டீன் தலைமையில் இடம்பெற்ற இத் திறப்பு விழா நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கட்டிடத்தினை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில், முன்னாள் சுகாதார ராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான பைசல் காசிம், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பொறியியலாளர் என்.சிவலிங்கம், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் டீ.ஜி. எம்.கொஸ்தா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர், மலேரியா தடுப்பு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எம்.நௌஷாட் உள்ளிட்ட வைத்தியர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## தீ விபத்தில் டயர் களஞ்சியசாலை சேதம்

ஊவா பரணகம- ஊமா எல பிரதேசத்தில் உள்ள டயர் களஞ்சியசாலை ஒன்று திங்கட்கிழமை (22) திடீரென தீ பிடித்து எரிந்து நாசமாகியுள்ளதாக அம்பகஸ்தோவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களஞ்சியசாலை மூடப்பட்டிருந்த போதே குறித்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதுடன், பண்டாரவளை நகரசபை தீயணைப்பு பிரிவினர், அம்பகஸ்தோவ பொலிஸார் மற்றும் ஊவா பரணகம பிரதேச சபையினர் இணைந்து தண்ணீர் பவுசுகளைப் பயன்படுத்தி தீயைப் பரவ விடாமல் அணைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.



தீ விபத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், மின் கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மேலும், இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



## ரந்தோலி பெரஹெர ஊர்வலம்

கதிர்காம தேவாலய இறுதி ரந்தோலி பெரஹெர ஊர்வலம் ஞாயிற்றுக்கிழமை (21) இரவு இடம்பெற்றது.







## சமுத்திர தீர்த்தோற்சவம்

**வி.சுகிர்தகுமார்**

இப்பூவுலகிலுள்ள சிறப்புப் பெற்ற புண்ணிய தலங்களுள் முக்கிய தலமாக அடியார்களினால் போற்றியும் வழிபடப்பட்டும் வரும் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் வரலாற்றுப் பிரசித்தி பெற்று விளங்கும் உகந்தைமலை ஸ்ரீ முருகன் ஆலய ஆடிவேல் சமுத்திர தீர்த்தோற்சவம் திங்கட்கிழமை (22) இடம்பெற்றது.





# தண்டத்தை அதிகரிப்பதால் இலஞ்சத்தை ஒழிக்க முடியாது

நமது நாட்டை பொறுத்தவரையில் எந்தத் துறையாக இருந்தாலும் சரி, இலஞ்சத்துக்கு குறைவே இல்லை. இலஞ்சமாகப் பணத்தைப் பெறுபவர்களில் பலரும் கையும் களவுமாக மாட்டிக்கொள்கின்றனர், பொருட்களாக வாங்குவோர் சிக்கிக்கொள்வது குறைவாகும். எனினும், ஒட்டுமொத்த விசாரணைகளில் சிக்கிக்கொள்வார்களாயின் அவர்களின் சொத்துக்கள் அரசுடைமையாக்கப்பட்டுவிடும். நீதிமன்றத்தின் ஊடாக தண்டனையையும் அனுபவித்துவருகின்றனர்.

இந்நிலையில், இயலாமையைப் பயன்படுத்தி, பலரும் பாலியல் இலஞ்சம் வரையிலும் சென்றுவிடுகின்றனர். தங்களுடைய மானத்தைக் காப்பாற்றி, கட்டிக்காப்பதற்காக, துணிந்து செயற்படும் பெண்கள், பாலியல் இலஞ்சம் கேட்பவர்களை வலைக்குள் விழச்செய்து, சிக்கவிட்டு விடுகின்றனர். இது, ஏனையோருக்கு ஒரு பாடமாக இருக்கவேண்டும்.

குடும்பத் தலைவன் இல்லாத, பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பலரிடம் பாலியல் இலஞ்சமாகக் கேட்கப்படுகின்றது. இவ்வாறான கோரிக்கைகளால் மன உளைச்சலுக்கு உள்ளாகிவிடுகின்றனர்.

நாடொன்றின் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான கொள்கைத்திட்டம் காணப்படுதல் வேண்டும். அக்கொள்கையானது திட்டமாக ஒட்டு மொத்த மக்களிடத்தும் வெளிப்படுத்தப்படல் வேண்டும். அச்சந்தர்ப்பத்திலேயே இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான மக்கள் ஒத்துழைப்பு கிடைக்கும்.

இந்நிலையில்தான், தேர்தலின் போது இலஞ்சம் வழங்கும் குற்றத்துக்காக விதிக்கப்படும் அபராதத்தை 500 ரூபாவில் இருந்து ஒரு மில்லியன் ரூபாவாக அதிகரிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

குற்றவியல் சட்டக்கோவையில் திருத்தம் மேற்கொள்வதற்கான சட்டமூலத்தின் ஊடாக இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படவிருக்கும் நிலையிலேயே இந்த திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

அந்த திருத்தத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றி, சட்டமாக்கி அமுல்படுத்த வேண்டும். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இழுபறியான நிலைமையொன்று இருப்பதால், இந்தத் திருத்தம் இம்முறை அமுலாவதில் தாமதமாகலாம்.

தேர்தலின் போது இலஞ்சம் வழங்கும் குற்றத்திற்காக விதிக்கப்படும் அபராதம் 200 ரூபாவில் இருந்து 750,000 ரூபாவாக அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போதைய அரசாங்கத்தால், சில திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றில் பல திட்டங்கள் தேர்தலுடன் தொடர்புடையவை என எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி, தேர்தல்கள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்துள்ளன. தேர்தலொன்றில் ஆள்மாறாட்டம் செய்யும் குற்றத்திற்காக இதுவரை 300 ரூபாய் மாத்திரமே அபராதமாக அறவிடப்பட்டது. இதனை ஒரு இலட்சம் ரூபாய் வரை அதிகரிக்க சட்டமூலத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வாக்குச்சாவடிகளிலும் இரண்டொரு வாக்குகள் ஆள்மாறாட்டம் செய்யப்பட்டு அளிக்கப்படும். அதற்கு வாக்குச்சாவடியில் இருக்கும் கட்சி பிரதிநிதிகளும் உடந்தையாகவே இருப்பர். அப்படியாயின், அவர்களுக்கும் தண்டவிதிக்கவேண்டும்.

போக்குவரத்துச் சட்டங்களை மீறுவோருக்கு விதிக்கப்படும் தண்டப்பணம் அதிகரிக்கப்பட்டால், இலஞ்சம் கொடுப்போரின் எண்ணிக்கையும் வாங்குவோரின் எண்ணிக்கையும் அதிகரிக்குமெனக் கூறுவதைக் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆகையால், இலஞ்சத்துக்கு எதிரான சட்டங்களை கடும் படுத்தவேண்டுமே தவிரத் தண்டத்தை அல்ல என்பதை நினைவில் கொள்க.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

இருவர் தங்களுக்குள் பேசியபடி சென்றார்கள். அவர்களில் ஒருவர், ஊரில் யாரோ இளைஞர்கள் சண்டை செய்ததாகச் சொன்னார். எங்கு நடந்தது என்பது பற்றிப் பேசாமல் சென்று கொண்டிருந்தனர்.

இதைக் கேட்ட வீதியின் அருகே நின்றிருந்தவர், "என்ன எங்கள் ஊரில் சண்டையா" என கேட்டு விட்டு, உடனே ஊருக்குள் சென்று, தனது கற்பனைகளையும் சேர்த்து, வாய், மூக்கு, வால் என்பவற்றைச் சேர்த்து, அங்குள்ள ஒருவருக்குச் சொல்ல, அவரும் அதற்கு மேலும் பல கதைகளைச் சோடித்துச் சொல்ல, ஊர்ச் சனங்களும் ஆவேசத்துடன் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, அவர்களைத் தேடிச் சென்றார்கள்.

ஊரே பரபரப்படைந்தது. முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து, "யாரடா இதைச் சொன்னது" என கேட்க, கதையைக் கட்டியவர்கள் ஒளித்துத் தப்பித்து விட்டார்கள். முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து,

தத்தமது காரியங்களைச் செய்தால், வீணான சிந்தனைகள் புறப்படாது. கலவரங்கள் எல்லாமே வதந்திகளால் தான் உருவாகின்றன. யுத்தங்கள் கூட!

-பருத்தியூர் பால.வயிரவநாதன்

# வெளியேற்றப்பட்ட வடக்கு முஸ்லிம்களுக்கான நீதி?

மொஹமட் பாதுஷா

> வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு நீதி வழங்கப்படுவதுடன், அவர்களின் பூர்வீக நிலத்தை வழங்குவதற்கு, இன்று நீதி நியாயம் என்று பேசுகின்ற தமிழ் அரசியல்வாதிகள் முன்னிற்க வேண்டும்

நாட்டில் கடந்த காலங்களில் நடைபெற்ற அநியாயங்களுக்கான, மனித உரிமை மீறல்களுக்கான நீதி நிலைநாட்டுதல் பற்றியே வருடக் கணக்காகப் பேசிக் கொண்டிருக்கின்றோம். இவ்வாறான நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டே இனப் பிரச்சினை தீர்வு கோரிக்கைகளும் அரசியல் முன்னெடுப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனால், 33 வருடங்களுக்கு முன்னர் தமது சொந்தப் பூர்வீக மண்ணான யாழ்ப்பாணத்தில் இருந்து விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு நடந்த அநியாயங்கள் பற்றியும், அவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பது பற்றியும் பெரிதாக யாரும் பேசுகின்ற மாதிரி தெரியவில்லை. இது ஒருவகை பாரபட்சம் இல்லையா?

1990ஆம் ஆண்டுதான் தமிழ் ஆயுதக் குழுக்களின் அட்டகாசம் உச்சக் கட்டத்தை நோக்கி நகரத் தொடங்கியது எனலாம்.

குறிப்பாக, முஸ்லிம்கள் தார்மீக ரீதியாக மட்டுமன்றி, பௌதீக (ஆளணி) அடிப்படையிலும் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவளித்துக் கொண்டிருந்த போதிலும் கூட, முஸ்லிம்களை நோக்கி ஆயுதங்கள் இக்காலப் பகுதியில் திருப்பப்பட்டன.

'தமிழ் ஈழம்' என்று இன்று வரை அடையாளப்படுத்தப்படுகின்ற வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம்கள் தமிழ் ஆயுதக் குழுக்களிடம் இருந்து இக் காலப்பகுதியில் சொல்லொண்ணா துன்பங்களை அனுபவித்தனர். அதற்காக முஸ்லிம்கள் தரப்பிலிருந்து சண்டியர்களால் அங்கொன்றும் இங்கொன்றுமாக அப்பாவி தமிழர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட சம்பவங்களை சரி என்று இப்பத்தி வாதிடவில்லை.

புலிகள், ஏனைய ஆயுதக்குழுக்கள், இந்திய அமைதி காக்கும் படைகள், அரச படைகளுக்கு இடையில் முஸ்லிம்கள் இருதலைக் கொள்ளியாக மாறிய காலம் என அதனைக் குறிப்பிடலாம். குறிப்பாக, கிழக்கில் விடுதலைப் புலிகளால்

பள்ளிவாசல் படுகொலைகள், கப்பம், கடத்தல், கொலை எனப் பல அநியாயங்கள் நடந்தேறின.

இதற்கு சமாந்திரமாக, 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் 30ஆம் திகதி வட மாகாணத்தில் வாழ்ந்த 90 ஆயிரத்திற்கு மேற்பட்ட முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளால் ஒரே நாளில் வெளியேற்றப்பட்டனர்.

புலிகள் ஒரு சாதனையாக நினைத்த இந்த நகர்வு மிகப் பெரும் வரலாற்றுத் துயராக, கறையாக அமைந்தது என்பதே உண்மையாகும்.

ஒரு நிலப்பரப்பில், வாழையடி வாழையாக வாழ்ந்து வருகின்ற இனக் குழுமத்தை அல்லது மக்கள் கூட்டத்தை தமது தேவைக்காக அங்கிருந்து முற்றாக வெளியேற்றுதல் என்பது நேரிடையாக கூறின் ஒரு இனச் சுத்திகரிப்பு ஆகும்.

அப்பாவி தமிழ் சகோதரர்கள் மனம் கோணக் கூடாது என்பதற்காக அதைப் பூசி மொழுக முடியாது.

வட மாகாணத்தின் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த முஸ்லிம்களை உடனடியாக வெளியேறுமாறும், கையில் சொத்துக்கள் எதனையும் கொண்டு செல்லக் கூடாது என்றும் புலிகள் அறிவித்தனர்.

முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படலாம் என்பதாலும் முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்காகவுமே அவ்வாறு புலிகள் இவ்வாறு செய்ததாக அப்போது சொல்லப்பட்டது.

ஆனால், தமிழீழ எல்லைக்குள் கணிசமாக முஸ்லிம்கள் இருப்பது ஆபத்து என்பதும், புலிகள் 90களில் பலம்பெற்றுக் கொண்டிருந்த காலத்தில் முஸ்லிம்கள் அங்கிருப்பது ஆட்புலத்தை கட்டமைக்கத் தடையாக அமையலாம் எனவும் புலிகள் கருதியிருக்கலாம் என்றே இந்தச் சம்பவத்தை ஆய்வு செய்த சர்ஜூன் ஜமால்டீன் போன்ற முஸ்லிம் ஆய்வாளர்களும் ஒருசில தமிழ் நோக்கர்களும் கருதுகின்றார்கள்.

இப்படி வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள், நகைகளையோ, வாகனங்களையோ பணம் போன்ற சொத்துக்களையோ எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஏன் அதிகமான ஆடைகளையோ மருந்துப் பொருட்களையோ கூடக்கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அவ்வாறு கொண்டு செல்ல முயன்றவர்களிடமிருந்த நகைகள், பணம் போன்றவை புலிகளால் பறிமுதல் செய்யப்பட்ட கதைகளை இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் இன்றும் கூறுகின்றனர்.

இந்த வெளியேற்றமும், அது நடந்தேறிய விதமும் மிக மோசமான முன்னுதாரணமாக அமைந்தது.

ஒரு சிறுபான்மைச் சமூகத்திற்காகப் போராடும் குழு, இன்னுமொரு சிறுபான்மை இனத்திற்கு அநியாயமிழைப்பது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாதது.

ஆகவேதான், அவர்கள் சொன்ன காரணங்களைத் தவிர, ஆட்புலத்தைப் பலப்படுத்துவதற்காகவும் முஸ்லிம்களின் நகைகள், சொத்துக்களைச் சூறையாடுதல் போன்றவற்றுக்காகவும் இந்த வெளியேற்றம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது என்ற அபிப்பிராயங்கள் முன்வைக்கப்படுகின்றன.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட கிட்டத்தட்ட ஒரு இலட்சம் முஸ்லிம்கள் தமது பிள்ளைக் குட்டிகளோடு கையில் பணமோ, நகையோ எங்குப் போகின்றோம் என்ற திசையோ தெரியாமல் தாய் மண்ணிலிருந்து புறப்பட்டார்கள்.

வள்ளங்களிலும் உழவு இயந்திரங்களிலும் கால்நடையாகவும் அந்த வடக்கிற்குக் கீழுள்ள நிலப் பரப்புகளுக்கும் புத்தளம் போன்ற இடங்களுக்கும் வந்தனர்.

முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்காக இப்படிச் செய்ததாகவும் புலிகள் தரப்பில் கூறப்பட்டது. அப்படியென்றால், அவர்களது சொத்துக்களை, நகைகளைக் கொடுத்து அனுப்பியிருக்க வேண்டும் அல்லது அவற்றைப் பத்திரமாகப் பாதுகாத்து மீள ஒப்படைத்திருக்க வேண்டும். அப்படியும் நடக்கவில்லையே!

ஒரு குறிப்பிட்ட நிலத்தில் பரம்பரை பரம்பரையாக வாழ்கின்ற மக்கள் அங்கிருந்து இரவோடிரவாக துரத்தியடிக்கப்படுவோம் என்று நினைத்திருப்பார்களா? கையில் பணமோ, பொருளோ இல்லாமல் எங்குச் செல்கின்றோம் என்று தெரியாமல் அந்த ரணங்களை எப்படிக் கடந்திருப்பார்கள்? என்று இன்றும் கூட நினைக்க முடியாதுள்ளது.

இப்படியான இனச் சுத்திகரிப்பு ஒன்று சிங்கள ஆட்சியாளர்களால் கூட தமிழ் மக்களுக்கோ முஸ்லிம் மக்களுக்கோ இடம்பெறவில்லை என்பது கவனிப்பிற்குரியது. ஆகவேதான், இது விடுதலைப் போராட்டத்தில் மிகப் பெரிய கறையாக, சாபமாக அமைந்தது என்று கூறலாம். ஆனால், ஒரு விடயம் இங்கு முக்கியமானது.

அதாவது, விடுதலைப் புலிகள் தமது நிகழ்ச்சி நிரலுக்காக இப்படிச் செய்த போதும், இதனை சில தீவிர தமிழ்ச் செயற்பாட்டாளர்களும் அரசியல்வாதிகளும் ஆதரித்த போதும், சில முற்போக்கு தமிழ் எழுத்தாளர்கள், செயற்பாட்டாளர்களும் இதனை எதிர்த்தார்கள்.

மிக முக்கியமாக அப்பாவித் தமிழ் மக்கள் இதனை விரும்பவும் இல்லை, ஆதரிக்கவும் இல்லை என்பதே உண்மையாகும்.

இரண்டறக் கலந்து வாழ்ந்த சகோதர முஸ்லிம்கள் துரத்தியடிக்கப்படுவதை சகோதர வாஞ்சையுள்ள எந்த தமிழ் மகனும் ஏற்கவில்லை. அதேபோன்று அதற்கு எதிராகப் போராடும் திறனில்லை.

ஆனால், முஸ்லிம்கள் வெளியேற்றப்படுவதை எண்ணி அழுது புலம்பி, முஸ்லிம்களுக்குக் கூடவே நீண்டதூரம் ஓடிவந்து, 'கவலைப்பட வேண்டாம்' என ஆறுதல் கூறி, தம்மால் முடியுமான உதவிகளைச் செய்த வடபுல தமிழ் மக்களை மறந்து விட முடியாது. இதனை இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் நன்றியுடன் இன்றும் நோக்குகின்றனர்.

இது நடந்து மூன்று தசாப்தங்கள் கடந்து விட்டது. புத்தளத்திலும் மன்னார் மற்றும் அதனையண்டிய பிரதேசங்களிலும் இந்த முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களது பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் என சனத்தொகை பல இலட்சமாகப் பெருகி விட்டது. அந்தந்த இடங்களிலேயே அவர்கள் நிலை கொண்டு விட்டனர்.

இருப்பினும், இந்தச் செயலுக்காகக் குறிப்பிட்ட விடுதலை இயக்கத்திற்கு எதிராக ஒரு விசாரணை நடத்தப்படவும் இல்லை.

முஸ்லிம்களுக்கு நீதி வழங்கப்படவும் இல்லை. இன்று ஜனநாயகம், மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றம் பற்றிப் பேசுகின்ற உள்நாட்டு, வெளிநாட்டுத் தரப்புக்கள் இதனைக் கிட்டத்தட்ட மறந்து விட்டனர்.

அடுத்த விடயம், இந்த மக்களுக்கு பிராயச்சித்தம் அல்லது இழப்பை ஈடுசெய்யும் முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. குறிப்பாக, அவர்களில் பலர் புத்தளம் போன்ற இடங்களில் நிரந்தர வாசிகளாக மாறி விட்டனர். அவர்களில் சிலருக்கு மீளவும் வடக்கிற்கு என்று ஆரம்பத்திலிருந்து வாழ்க்கையை தொடங்குவது சிரமமாக இருக்கலாம். ஆனால், அது அவர்களின் தாய்நிலம் என்பதை மறுக்க முடியாது.

அந்த வகையில், இதுவரை அவர்களில் சொற்பளவானோரே மீளக் குடியேற்றப்பட்டுள்ளனர். மீதமுள்ளோரைக் குடியேற்ற முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசாங்கத்துடன் இணைந்து மேற்கொண்ட முயற்சிகள் கைகூடவில்லை.

இதற்குப் பிரதானமாகக் கூறப்படுவது வடக்கு தமிழ் அரசியலும், சிலரது மனப்பாங்கும் ஆகும்.

இந்த நிலைமைகள் மாற வேண்டும். வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு நீதி வழங்கப்படுவதுடன், அவர்களின் பூர்வீக நிலத்தை வழங்குவதற்கு, இன்று நீதி நியாயம் என்று பேசுகின்ற தமிழ் அரசியல்வாதிகள் முன்னிற்க வேண்டும்.

## கடிதங்கள்



### பசுக்களை காப்பாற்றுங்கள்


புங்குடுதீவில் திருடர்களால் பசுவுக்குக் கடுமையான அவலம் நேர்ந்துள்ளதாகவும் இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணை முன்னெடுக்க வேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். புங்குடுதீவு J/22 கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட வரதீவு பகுதியில் பற்றைக்காட்டினை அப்பகுதியின் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராமசேவகர் ஸ்ரீதரன் தலைமையிலான குழுவினர் சுற்றிவளைத்த போது, சட்டவிரோதமான முறையில் மாடு ஒன்றினை வெட்டி இறைச்சியாக்கிக் கொண்டிருந்த இருவர் தப்பியோடியுள்ளனர்.

இப்பகுதியில் ஏற்கெனவே பலதடவைகள் கால்நடைகளைச் சட்டவிரோதமாகக் கொலை செய்தமைக்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன.

கடந்த ஒரு மாதகாலமாக புங்குடுதீவில் சட்டவிரோத இறைச்சியாக்கும் செயற்பாடுகள் வெகுவாக குறைந்திருந்த நிலையில் மீண்டும் இவ்வாறான அசம்பாவிதங்கள் தலையெடுத்திருப்பது குறித்து நீதித் தரப்பினரும், பொலிஸாரும் துரித கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று பொதுமக்கள் கோரியுள்ளனர்.

- நிதர்ஷன் வினோத்




# மகிழ்ச்சியாக வாழ்வோம்

## ஜூலை 22 சர்வதேச மூளை தினமாகும்



சுப்ரமணியம் காயத்திரி,
யாழ். பல்கலைக்கழகம்,
ஊடகக் கற்கைகள் துறை.

உலக நரம்பியல் கூட்டமைப்பு ஜூலை மாதம் 22ஆம் திகதியினை சர்வதேச மூளை தினமாக பிரகடனப்படுத்தியது. 'பக்கவாதத்தை தடுத்தல்' எனும் கருப்பொருளின் கீழ் 2024ஆம் ஆண்டிற்கான மூளை தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

ஒரு கிலோ 400 கிராம் எடையுடையதும், ஒரு சிக்கலானதுமான உறுப்பு மூளையாகும். உலகில் ஏனைய உயிரினங்களை விட முதுகெலும்பினையுடைய மிகப்பெரிய மூளை மனிதனுடையதேயாகும்.

மனித உடலில் ஏனைய உறுப்புகளுக்குத் தகவல்கள் மற்றும் சமிக்ஞைகளைக் கடத்துகின்றதோடு, எமது எண்ணங்கள், உணர்ச்சிகள், இயக்கங்கள் மற்றும் புலன்களென அனைத்துச் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துகின்ற பிரதான கட்டுப்பாட்டு மையமாகவும் செயற்படுகின்றது.

மூளையானது சிறு மூளை, பெருமூளை, மூளை தண்டு என மூன்று பிரதான பகுதிகளையுடையது. இம்மூன்று பகுதிகளில் ஒன்று முழுமையாக செயற்படாதுவிடின், மனித மூளையின் திறன் குறைய ஆரம்பிக்கின்றது. மூளையில் பெருமூளை பகுதியானது,

வலது மற்றும் இடது என இரு அரைக்கோளங்களாக பிரிக்கப்பட்டுக் காணப்படுவதுடன், "எமது சிந்தனை, செயல் போன்ற உயர் மூளைச் செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றது". சிறு மூளை "மனித உடலின் சமநிலை மற்றும் ஒருங்கிணைப்பினை ஒழுங்குபடுத்துகின்றது" மூளைத்தண்டு பல கணக்கான நியூரோன்களாலானது.

அத்துடன், சினாப்ஸ் எனப்படும் பல மில்லியன் கணக்கான இணைப்புகளினால் தொடர்பு கொள்ளப்பட்டு, அவை மூளை தண்டு மூலம் கடத்தப்படுகின்றது. மூளையை முதுகெலும்புடன் இணைக்கின்ற பணியினையும் மூளைத்தண்டு மேற்கொண்டு வருகின்றது.

நமது மூளையினை பராமரிப்பது எமது எதிர்கால வாழ்விற்கான சிறந்த முதலீடாகும். அந்த வகையில் மூளையினை பல்வேறு சந்தர்ப்பங்களில் பாதுகாத்துக் கொள்ளுதல்

அவசியமாகும். அவற்றுள்,

1. நோய்கள் எதுவும் வராமல் பாதுகாத்தல்,

2. நோய்கள் ஏதேனும் ஏற்பட்டால் அந்நோய்களுக்கு பொருத்தமான சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளுதல்,

3. மீளவும் மூளையின் திறன்களைப் புனரமைத்தல், போன்ற மூன்று நிலைகளிலும்

மூளையினை ஆரோக்கியமாகப் பராமரித்துக் கொள்ளல் வேண்டும்.

மூளையினை பாதுகாத்துக் கொள்வதற்காக எம்மிடமே சிறந்த வழிமுறைகள் காணப்படுகின்றன. அவ்வழிமுறைகளை சீரான முறையில் செயற்படுத்துவதன் மூலம் மூளையில் ஏற்படக்கூடிய நோய்களிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

மூளையினை பாதுகாத்துக் கொள்வதற்கான சில வழிமுறைகள்,

* காய்கறிகள் ,பழங்கள் மற்றும் தானியங்கள் உள்ளடக்கிய உணவுகளை உட்கொள்ளுதலானது, எமது மூளையின் செல்கள் சேதமடைவதைத் தடுக்க உதவும்.

* மூளையின் குருதி ஓட்டத்தினை சீராக்குவதற்கும், ஞாபக சக்திக்கு மற்றும் கற்றல் நடவடிக்கைகளுக்கு நித்திரையும் முக்கியமானதாகும்.அதற்கு இரவில் 7- 8 மணி நேரத் நித்திரை கொள்ளுதல் போதுமானதாகும்.

* இன்று மனிதர்களிடையே மன அழுத்தம் அதிகமாக காணப்படுகின்ற பிரச்சினையாகும். மன அழுத்தத்தைக் குறைப்பதற்கு உடற்பயிற்சி, தியானம் மற்றும் யோகா போன்ற மனதினை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுதல் சிறந்ததாகும்.

* அதிகளவில் புகைப்பிடித்தல் மற்றும் மது அருந்துதல் போன்ற செயற்பாடுகளைத் தவிர்த்து, அதற்கு பதிலாக சமூகத்திலுள்ள ஏனைய நபர்களுடன் தொடர்பாடலினை மேற்கொள்ளுதல், இயற்கையான விடயங்களை இரசனை செய்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுதல் சிறந்ததாகும்.

* பரம்பரை வழியாக குடும்பத்தில் வேறு யாரேனும் நபர்களுக்கு மூளை நோய்கள் இருந்தால் அது குறித்து மருத்துவரின் ஆலோசனைகளை பெறுதல் அவசியமாகும்.

இவற்றுடன், தொலைபேசி பாவனையைக் குறைத்தல், தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் பயணிப்பதினை தவிர்த்தல் மற்றும் கோபமற்ற தன்மை என்பனவும் மூளையின் ஆரோக்கியத்தினை பேணுவதற்கான சிறந்த வழிமுறைகளாகும்.

பக்கவாதம், வலிப்பு நோய், அதிர்ச்சிகரமான மூளைக்காயம், அல்சீமர் நோய் போன்றன எமக்கு மூளையில் ஏற்படக்கூடிய சில நோய்களாகும். இவ்வாறு மூளையில் ஏற்படக்கூடிய நோய்களிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் ஜூலை 22ஆம் திகதி உலகம் உலக மூளை தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

1957 ஜூலை 22ஆம் திகதி உலக நரம்பியல் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஜூலை 22ஐ உலக மூளை தினமாக அனுஷ்டிப்பதற்கான எண்ணம், பொது விழிப்புணர்வு மற்றும் வாதிடும் குழுவின் முன்மொழிவிலிருந்து உருவானதுடன், அதற்கான அங்கீகாரமும் வழங்கப்பட்டு 2014 ஜூலை 22ஆம் திகதி தொடக்கம் மூளை தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. 2014 முதல் கடந்த 9 வருடங்களில் ஒவ்வொரு கருப்பொருளின்

கீழ் மூளை தினம் கொண்டாடப்பட்டு வரப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு " நமது மூளை நமது எதிர்காலம்"

2016- "அல்சைமர் நோய் பற்றிய விழிப்புணர்வு"

2019- "ஒற்றைத் தலைவலி பற்றிய விழிப்புணர்வு"

2020 - "நரம்பியல் கடத்தல் நோயான பார்க்கின்சன் நோய் பற்றிய விழிப்புணர்வு"

2021 - "மல்டிபிள் இஸ்களிரோசியை நிறுத்துங்கள்"

2023 - "மூளை ஆரோக்கியம் மற்றும் குறைபாடு பற்றிய விழிப்புணர்வு"


2024 ஜூலை 22 (இன்று) பக்கவாதத்தினை தடுத்தல்" என்னும் தொனிப்பொருளின் கீழ் மூளை தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. பக்கவாதம் ஒருவரின் உயிரைக்காவக்கூடிய நோய் நிலைமையாகும்.

இலங்கையில் 90% அளவு தீவிரமான நோயாகவும் பக்கவாதம் காணப்படுகின்றது. இரத்த அழுத்தம், நீரழிவு கொலஸ்ட்ரால் , மற்றும் உடல் பருமன் அதிகரித்தல் போன்ற நிலைமைகள் குறித்து அவதானமாகச் செயற்படுதல் வேண்டும்.

பக்கவாதம் நோய் ஏற்படுடின், மூன்று பிரதான அறிகுறிகளின் கீழ் அந்நோயினை அடையாளப்படுத்த முடியும். வாய் கோணுதல், கை அல்லது கால் உணர்வின்றி போதல், வாய்க்குளறல் போன்ற அறிகுறிகள் தென்படக்கூடும்.இந்நோயினால் சில நேரங்களில் கண்பார்வையை இழக்கவும் நேரிடலாம். இவ்வாறான அறிகுறிகள் ஏற்படின் விழிப்புணர்வுடன் செயற்படுதல் அவசியமாகும்.

2024ஆம் ஆண்டின் மூளைத் தினத்தின் விழிப்புணர்விற்கமைய எம்மை பக்கவாத நோய் நிலைமை மற்றும் மூளையில் தோன்றக்கூடிய ஏனைய நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் சிறந்ததாகும்.

அத்துடன் எப்பொழுதும் நேர்மறையான எண்ணங்களுடன் சுறுசுறுப்பான மனநிலையுடன் மகிழ்ச்சியாக வாழ்வதற்கும் எம்மை பழக்கப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.



# ஸ்ரீரெட்டிக்கு சிக்கல்

நடிகர்கள் மற்றும் இயக்குநர்கள் மீது பாலியல் புகார் கூறி பரபரப்பு ஏற்படுத்தியவர் தெலுங்கு கவர்ச்சி நடிகை ஸ்ரீரெட்டி. பட வாய்ப்பு தருவதாக தன்னை தவறாக பயன்படுத்தியதாக குற்றம் சாட்டினார். உடைகளை களைந்து போராட்டமும் நடத்தினார்.

நடிகர்கள் மீதும் புகார் அளித்து வந்த ஸ்ரீரெட்டி, தற்போது அரசியல் பிரமுகர்கள் மீதும் சர்ச்சை கருத்துகளை வெளியிட்டு வருகிறார்.

இந்த நிலையில், ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு, துணை முதலமைச்சர் பவன் கல்யாண், மந்திரிகள் லோகேஷ், அனிதா ஆகியோர் பற்றி ஸ்ரீரெட்டி அவதூறாக பேசியதாக புகார் அளிக்கப்பட்டது.

இதையடுத்து, ஸ்ரீரெட்டி மீது பொலிஸார் பல பிரிவுகளின் கீழ வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

# இலங்கை வந்தார் விஜய் ஆண்டனி




புஸ்பராசா மயூரதி

இந்திய தமிழ் சினிமாவின் புகழ்பெற்ற இசையமைப்பாளரும் நடிகருமான விஜய் ஆண்டனியின் இசை நிகழ்ச்சியொன்று செப்டெம்பர் 7ஆம் திகதி சுகததாச உள்ளகரங்கில் நடைபெற்றது.

நிகழ்ச்சியின் முன்னேற்பாடாக One Galle Face வணிக வளாகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று ஞாயிற்றுக்கிழமை (21) நடத்தப்பட்டது.


இதன்போது, செருப்பு அணியாது ஊடக சந்திப்பிற்கு வந்தமை தொடர்பில், விஜய் ஆண்டனியிடம் கேட்டதற்கு, "அது ஒரு மாற்றத்திற்கு தான், நீங்களும் செருப்பில்லாமல் நடந்து பாருங்கள் நிச்சயம் ஒரு மாற்றம் உண்டாகும்" என தெரிவித்ததோடு, இலங்கை கலைஞர்களுக்கும் தனது படங்களில் வாய்ப்பு தருவதாகவும் இலங்கையில் படப்பிடிப்பு மேற்கொள்வாதாகவும் தெரிவித்தார்.


அதில் பெருந்திரளான ரசிகர்களும் கலந்து கொண்டிருந்ததுடன்,விஜய் அன்டனி ரசிகர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அதேவேளை, பின்னனி பாடகர்களும் கலந்துக்கொண்டு சில பாடல்களையும் பாடி ரசிகர்களை மகிழ்வித்தனர்.

இதன்போது, இலங்கையின் முன்னனி இசை கலைஞர்களில் ஒருவரான இராஜ் வீரரத்னவின் பாடல்களை வழங்கியமை மற்றும் புகழ்பெற்ற சொல்லிசை கலைஞர் தினேஷ் கனகரத்னம் என இலங்கைக்கும் அவருக்குமான தொடர்பினை நினைவுகூரினார்.

அத்தோடு, ரசிகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க சகோதர மொழி பாடல்களையும் செப்டெம்பர் 7ஆம் திகதி நடைபெறவுள்ள இசை நிகழ்ச்சியில் பாடுவதாகவும் தெரிவித்திருந்தார்.

இதில் தென்னிந்திய இசையமைப்பாளர் விஜய் ஆண்டனி உள்ளிட்ட பிரதான அனுசரணையாளர்களான ஆரா என்டடைமன்ட்டின் நிர்வாக இயக்குனர் ஆனந்த் ராமநாதன் மற்றும் சதீஸ் ஜூவல்லரியின் நிர்வாகப் பணிப்பாளர் இராமையா சதாசிவம் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# த்ரிஷாவின் திகில்

கடந்த 22 வருடங்களாக தமிழ் மற்றும் தெலுங்கு முன்னணி நட்சத்திர கதாநாயகியாக இருப்பவர் நடிகை த்ரிஷா.

கடந்த வருடம் வெளியான 'லியோ' மற்றும் 'பொன்னியின் செல்வன்' ஆகிய இரண்டு படங்களிலும் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்து இருந்தார், இந்த இரண்டு திரைப்படமும் மாபெரும் வெற்றியை பெற்றது.

தற்பொழுது தக் லைஃப் , விடா முயற்சி , கோட் ஆகிய டாப் ஹீரோ திரைப்படங்களில் நடித்து வருகிறார். இந்நிலையில், த்ரிஷா நடித்து இருக்கும் பிருந்தா எனும் வெப் தொடர் வரும் ஆகஸ்ட் 2ஆம் திகதி வெளியாகவுள்ளது.

த்ரிஷா முதல்முறை நடிக்கும் ஓடிடி தொடரின் டீசர் அண்மையல் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை பெற்றது. இத்தொடரை சூர்யா வங்களா இயக்கியுள்ளார். சோனி லைவில் வெளியாகவுள்ளது.

சஸ்பன்ஸ் திரில்லர் கதைக்களத்துடன் அமைந்திருக்கும்இத்தொடர் தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி, மராத்தி மற்றும் பெங்காலி மொழிகளில் வெளியாகவுள்ளது.


இந்த தொடரில் பொலிஸ் கதாப்பாத்திரத்தில் த்ரிஷா நடித்துள்ளார்.

# தளபதி – புரட்சி தளபதி மோதல்?



தளபதி விஜய் நடித்துள்ள 'கோட்- திரைப்படம் வரும் செப்டெம்பர் 5ஆம் திகதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், திடீரென விஷாலின் படம் அதே தினத்தில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தளபதி விஜய் நடிப்பில், வெங்கட் பிரபு இயக்கத்தில், யுவன் சங்கர் ராஜா இசையில் உருவாகியுள்ள 'கோட்' திரைப்படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து ரிலீஸ் ஆக உள்ளது. இந்த நிலையில், 10 ஆண்டுகளுக்கு மேலாகக் கிடப்பில் இருக்கும் விஷாலின் 'மதகத ராஜா' என்ற திரைப்படம் அதே செப்டெம்பர் 5ஆம் திகதி தான் வெளியிடத் திட்டமிடப்பட்டு இருப்பதாகச் செய்தி வெளியாகி உள்ளது. இந்த படத்தை ரிலீஸ் செய்ய விஷால் எடுத்த முயற்சிக்கு நல்ல பலன் கிடைத்துள்ளதாகவும் இதனை அடுத்து ரிலீஸ் செய்யத் திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.




விஷால் நடிப்பில், சுந்தர் சி இயக்கத்தில் உருவான 'மத கஜ ராஜா' என்ற திரைப்படம் கடந்த 2012ஆம் ஆண்டு தொடங்கி 2013ஆம் ஆண்டு ரிலீசுக்கு தயாரானது. விஷால், அஞ்சலி, வரலட்சுமி, சந்தானம், நிதின் சத்யா, சடகோபன் ரமேஷ் உட்பட பலர் நடிப்பில் உருவான இந்த படத்திற்கு விஜய் ஆண்டனி இசையமைத்துள்ளார்.



அமெரிக்கா

## பெஷன் ஷோவில்
# உலகத் தலைவர்கள்

பிரதமர் மோடி, ரஷ்ய ஜனாதிபதி புட்டின் உள்ளிட்ட உலக தலைவர்கள் பேஷன் ஷோவில் பங்கேற்றால் எப்படியிருக்கும் என்ற எண்ணத்தில் 'ஏ.ஐ' தொழில்நுட்பம் மூலம் உருவாக்கப்பட்ட காணொளியை உலக செல்வந்தர்களின் ஒருவரான எலான் மஸ்க் பகிர்ந்துள்ளார்.

செயற்கை நுண்ணறிவு எனப்படும் 'ஏ.ஐ' தொழில்நுட்பம் தற்போது பல விடயங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. நாம் செய்ய நினைப்பதை கற்பனையுடன் தொழில்நுட்ப உதவியால் செய்வதே இதன் முக்கிய நோக்கம். உதாரணமாக ஒரு சிறுவனின் புகைப்படத்தை வைத்து அடுத்த 50 ஆண்டுகளுக்கு பிறகு எப்படி இருப்பார் என 'ஏ.ஐ' மூலம் அறியலாம்.

அப்படியான 'ஏ.ஐ'யை பயன்படுத்தி உலக பணக்காரர்களில் ஒருவரும், 'எக்ஸ்' வலைதள நிறுவனருமான எலான் மஸ்க், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உள்ளிட்ட உலக தலைவர்கள் பேஷன் ஷோவில் பங்கேற்றால் எப்படியிருக்கும் என்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்ட வீடியோவை பகிர்ந்துள்ளார்.

மேலும், சமீபத்தில் நடந்த மைக்ரோசாப்ட் மென்பொருள் குளறுபடியை கிண்டலடிக்கும் வகையில், மைக்ரோசொப்ட் நிறுவனர் பில் கேட்ஸ் நடந்து வருவதும் வீடியோவில் இடம்பெற்றுள்ளது. எலான் மஸ்க்கும் இந்த வீடியோவில் இடம்பெற்றுள்ளார். இது தற்போது வைரலாகியுள்ளது.

சீனா

## பாலம் இடிந்து விழுந்ததில்
# பலியானோர் எண்ணிக்கை அதிகரிப்பு

சீனாவின் ஷாங்கி மாகாணத்தில் பெய்த கடும் மழையால் அங்குள்ள ஜின்கியான் ஆற்றில் பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, அந்த ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த பாலம் திடீரென இடிந்து விழுந்துள்ளது.

இந்த சம்பவத்தில் பலியானோரின் எண்ணிக்கை 20ஆக உயர்ந்துள்ளது என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக இந்த வெள்ளப்பெருக்கில் சிக்கி 12 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் 30க்கும் மேற்பட்டோர் மாயமாகி இருப்பதாகவும் மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்றும் கூறப்பட்டது.



இந்த நிலையில், திங்கட்கிழமை (22) மேலும் 8 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். இதன்மூலம் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டுப் பலியானோரின் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளது.

மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது.

வெள்ளப்பெருக்கின் போது, அந்த பாலத்தின் மீது 25-க்கும் மேற்பட்ட கார்கள், லொறிகள் சென்று கொண்டிருந்தன. இதனால் அந்த வாகனங்களும் ஆற்று வெள்ளப்பெருக்கில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சீனா

## அதிக லைக்ஸ் பெறவேண்டி
# நேரலையில் பரிதாப பலி

சீனாவில் பிரபல யூட்யூபராக இருந்த பெண் நேரலையில் அளவுக்கு அதிகமாக சாப்பிட்டு பலியான சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உலகம் முழுவதும் தற்போதைய தலைமுறை இடையே யூட்யூப், இன்ஸ்டாகிராம் மோகம் அதிகரித்துவிட்ட நிலையில், யூட்யூப் கிரியேட்டர்களும் அதிகரிக்க தொடங்கியுள்ளனர்.

அவ்வாறாக சீனாவில் உணவு வீடியோக்கள் செய்து பிரபலமானவர்தான் பான் ஜியோடிங் என்ற பெண். இவர் உணவுகளை அதீதமாக சாப்பிடுவது, உணவு விமர்சனம் செய்வது என பல வீடியோக்களை செய்து பிரபலமானார்.

அதேசமயம், அதீதமான உணவுகளின் காரணமாக இவர் உடல் எடை வேகமாக அதிகரித்தது. 120 கிலோ எடையில் இருந்த பான் ஜியோடிங் சமீபத்தில்



உணவு செரிமான கோளாறு தொடர்பான சிகிச்சையும் எடுத்துக் கொண்டிருந்துள்ளார்.

அப்படியிருந்தும் மருத்துவமனையிலிருந்து வெளியான சில நாட்களிலேயே உணவு சவால் ஒன்றை நேரலையில் வீடியோவாக தனது சேனலில் செய்துள்ளார். சுமார் 10 கிலோ எடையுள்ள உணவுகளை அவர் தொடர்ந்து சாப்பிட்டு லைவ் செய்துள்ள நிலையில், அவர் திடீரென மயங்கி விழுந்து இறந்துள்ளார்.

இந்நிலையில், அவர் அதிகமான உணவுகளை சாப்பிட்டதும் அவை செரிமானமாகாமல் இருந்ததுமே அவர் உயிரிழக்க காரணம் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.


வேலூர்

## விசாரணைக் கைதியின் மரணத்தால்
# சிறை அதிகாரிக்கு சிறை

வேலூரில் விசாரணைக் கைதி மரண வழக்கில், காவல் ஆய்வாளர் முரளிதரனுக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2013இல் சட்டவிரோத மது வழக்கில், கைது செய்யப்பட்ட கோபி என்பவர் பொலிஸ் நிலையத்தில் விசாரணையின் போது உயிரிழந்துள்ளார். இது தொடர்பாக வேலூர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் விசாரணைகள் முடிவடைந்த நிலையில், திங்கட்கிழமை ( 22) தீர்ப்பு அளிக்கப்பட்டது.

அதன்படி, காவல் ஆய்வாளர் முரளிதரன் உட்பட 3 பேருக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து வேலூர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.





## எல்.பி.எல்: நான்காவது தடவையாக
# சம்பியனான ஜஃப்னா கிங்ஸ்

லங்கா பிறீமியர் லீக்கில் (எல்.பி.எல்) நான்காவது தடவையாக ஜஃப்னா கிங்ஸ் சம்பியனானது.

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை (21) நடைபெற்ற கோல் மார்வெல்ஸுடனான இறுதிப் போட்டியில் வென்றே ஜஃப்னா கிங்ஸ் சம்பியனானது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஜஃப்னா கிங்ஸின் அணித்தலைவர் சரித் அசலங்க, தமது அணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமென அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய கோல் மார்வெல்ஸ், ஆரம்பத்திலேயே அணித்தலைவர் நிரோஷன் டிக்வெல்ல, அலெக்ஸ் ஹேல்ஸ், ஜனித் லியனகேயை ஜேஸன் பெஹ்ரென்டோர்ஃப் (2), அசித பெர்ணாண்டோவிடம் இழந்து தடுமாறியது.

பின்னர் டிம் செய்ஃபேர்ட்டும், பானுக ராஜபக்‌ஷவும் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய நிலையில் அசித பெர்ணாண்டோவிடம் 47 (37) ஓட்டங்களுடன் செய்ஃபேர்ட் வீழ்ந்தார். அதன் பின்னர் வந்த சஹான் ஆராச்சிகே 16 (14) ஓட்டங்களுடன் அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாயுடன் வீழ்ந்தார்.

இறுதியாக 82 (34) ஓட்டங்களுடன் பானுக ராஜபக்‌ஷவும் அசித பெர்ணாண்டோவிடம் ஆட்டமிழக்க, டுவைன் பிறிட்டோறியஸின் ஆட்டமிழக்காத 12 (10) ஓட்டங்களுடன் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 184 ஓட்டங்களை கோல் மார்வெல்ஸ் பெற்றது.

பதிலுக்கு 185 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஜஃப்னா கிங்ஸ், தமது இனிங்ஸின் முதலாவது பந்திலேயே பதும் நிஸங்கவை பிறிட்டோறியஸிடம் இழந்தபோதும் றைலி றொஸோவின் ஆட்டமிழக்காத 106 (53), குசல் மென்டிஸின் ஆட்டமிழக்காத 72 (40) ஓட்டங்களோடு 15.4 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்த நிலையில், வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் றொஸோ தெரிவானார்.

## டயலொக் பாடசாலைகள் றக்பி தொடர்:
# வென்ற தர்மராஜ, வித்யார்த, இசிப்பத்தன

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடரில், போகம்பரவில் ஞாயிற்றுக்கிழமை (21) நடைபெற்ற போட்டிகளில் கண்டி தர்மராஜக் கல்லூரி, வித்தியார்த கல்லூரி, இசிப்பத்தன்ன கல்லூரி ஆகியன வென்றுள்ளன.

போஹம்பர மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (21) நடைபெற்ற விஞ்ஞானக் கல்லூரியுடனான போட்டியில் 15-10 என்ற புள்ளிகள் கணக்கில் தர்மராஜக் கல்லூரி வென்றது.

இந்நிலையில் நித்தவெலவில் நடைபெற்ற தேர்ஸ்டன் கல்லூரியுடனான போட்டியில் 52-20 என்ற புள்ளிகள் கணக்கில் வித்தியார்த கல்லூரி வென்றது.

இதேவேளை, சுகததாஸ அரங்கில் நடைபெற்ற டி.எஸ் சேனநாயக்க கல்லூரியுடனான போட்டியில் 27-24 என்ற புள்ளிகள் கணக்கில் இசிப்பத்தன கல்லூரி வென்றது.

Dialog
SCHOOLS
RUGBY
நாளைய செம்பியன்களை வலுவூட்டும்
Dialog எதிர்காலம் இன்றே

# ஆசிய ஆடவர் மல்யுத்த சம்பியன்ஷிப்பில் சிவானந்தாவின் ஹரிபிரசாத்

தாய்லாந்தில் நடைபெறவுள்ள ஆசிய ஆடவர் மல்யுத்த சம்பியன்ஷிப்பில் மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலை மாணவன் கிருஷ்ணகுமார் ஹரிபிரசாத் பங்குபற்றவுள்ளார். இதனை முன்னிட்டு, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் மாணவனுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்தார்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து சிவானந்தா தேசிய பாடசாலையில் உயர்தரத்தில் இறுதி ஆண்டில் கல்வி பயிலும் மாணவன் கிருஷ்ணகுமார் ஹரிபிரசாத் மாணவனுக்கு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த், உதவி மாவட்டச் செயலாளர்



ஜி.பிரணவன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஜதிஸ்குமார் மற்றும் பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் ஆகியோர் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

இலங்கை மல்யுத்த சம்மேளனம் நடத்திய மல்யுத்த தெரிவுப் போட்டியில், 57 கிலோ கிராம் இடைப்பிரிவில் வென்றே இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஹரிபிரசாத் செல்ல உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாணவனுக்கு மல்யுத்த நுட்பங்களை திருசச்செல்வம் ஆசிரியர் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மல்யுத்தம்:
# முல்லை மாங்கை கிழக்கு விநாயகபுரம் பாடசாலை பிரகாசிப்பு

நடராசா கிருஷ்ணகுமார்

வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான, மல்யுத்தம், யூடோ தைக்குவாண்டோ போட்டிகளில் முல்லைத்தீவு மாந்தை கிழக்கு விநாயகபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை சாதனை படைத்துள்ளது.

முல்லைத்தீவு உள்ளக அரங்கில் அண்மையில் நடத்தப்பட்ட இப்போட்டிகளில், விநாயகபுரம் அ.த.கவின் எட்டுப் பேர் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

இம்மாணவர்களுக்கு பாடசாலையில் அதிபர் தலைமையில் வெற்றிக்கு ஆதரவாக செயற்பட்டவர்களையும்



அழைக்கப்பட்டு இச்சாதனையை நிலைநாட்டிய மாணவர் பாடசாலையின் அனைத்து மாணவர்கள் முன்னிலையில் கௌரவிக்கப்பட்டனர்.

மல்யுத்தத்தில் இரண்டு முதலிடங்களையும், நான்கு மூன்றாமிடங்களையும், தைக்குவாண்டோவின் ஒரு இரண்டாமிடத்தையும், 3 மூன்றாமிடங்களையும், ஜூடோவில் ஒரு முதலாமிடத்தையும், மூன்று இரண்டாமிடங்களையும், 4 மூன்றாமிடங்களையும் இப்பாடசாலை பெற்றிருந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 23 ஜூலை 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.